இனிமையான குழந்தைகளே - மாயையின் வியாதியிலிருந்து விடுபடுவதற்காக ஞானம் மற்றும் யோகம் என்ற ஆப்பிளை தினமும் சாப்பிட்டுக் கொண்டே இருங்கள்.

கேள்வி: கர்மாதீ நிலையில் செல்வதற்கான புருஷார்த்தம் என்ன?

பதில்: அப்பேர்ப்பட்ட அப்பியாசம் செய்ய வேண்டும் அதாவது புத்தியில் தந்தையைத் தவிர வேறு யாருடைய நினைவும் இருக்கக் கூடாது. "அந்த் மதி சோ கதி" (கடைசியில் புத்தி எவ்வாறோ அவ்வாறே கதி). இது போல புத்தியில் எதுவுமே நினைவு இல்லாத அப்பேர்ப்பட்ட நிலை அமைத்து கொள்ளும் பொழுது சதா மகிழ்ச்சியாகவும் இருப்பீர்கள் மற்றும் கர்மாதீத நிலையையும் அடைந்து விடுவீர்கள். உங்களுடைய புருஷார்த்தமே ஆத்மா அபிமானி ஆவதற்கானது ஆகும். ஆத்மா ஆத்மாவைத் தான் பார்க்க வேண்டும். ஆத்மாவிடம் உரையாட வேண்டும் அப்பொழுது குஷி இருந்துக் கொண்டே இருக்கும். நிலை ஸ்திரமானதாக ஆகி விடும்.

பாடல்: தாயும் நீயே......

ஓம் சாந்தி. பாடலோ சரியானது ஆகும். ஏனெனில் முழு சிருஷ்டியின் படைப்புக்கர்த்தா மற்றும் பின் யார் மூலமாக படைப்பை படைக்கிறாரோ அவருக்கு தான் தாய் தந்தை என்று கூறப்படுகிறது. படைப்பவர் என்று எந்த ஒரு சாகார அல்லது ஆகார சரீரத்தவருக்கு கூறப்படுவதில்லை. படைப்பவர் என்று ஒரே ஒரு நிராகாரமாக இருப்பவருக்குத் தான் கூறப்படுகிறது. இப்பொழுது இந்த தெளிவு குழந்தைகளாகிய உங்களுக்கு கிடைத்துள்ளது. அவர்களோ வெறும் பாடுகிறவர்கள். பக்தர்களுடைய புத்தியில் பக்தி செய்ய வேண்டும் அவ்வளவே, என்பது மட்டும் இருக்கும். ஆனால் யாருக்கு பக்தி செய்ய வேண்டும் என்பது எதுவுமே தெரியாது. யாருக்கு தாய் தந்தை என்று கூறுகிறோமோ அந்த ஒரு பகவானுக்குத் தான் பக்தி செய்ய வேண்டுமேயன்றி ஆயிரக்கணக்கானோருக்கு அல்ல. பகவான் வந்து பக்தர்களுக்கு பக்தியின் பலனை கொடுப்பார் என்கிறார்கள். பலன் அல்லது ஆஸ்தி ஒரே விஷயம் தான். குழந்தை பிறந்து விடுகிறது என்றால் தாய் தந்தையின் ஆஸ்தியினுடைய பலன் கிடைக்கிறது. மற்றபடி இந்த பாடலோ பக்தி மார்க்கத்தினுடையது ஆகும். வந்து எங்களுக்கு பக்தியின் பலனை கொடுங்கள் என்று நினைவு செய்கிறார்கள். ஞானம் மற்றும் பக்தி என்றும் கூறுகிறார்கள். பக்தியின் பலன் ஞானமாகும். பக்தி எப்பொழுது முதல் ஆரம்பமாகி உள்ளது என்பதை உண்மையில் நீங்கள் இப்பொழுது அறிந்துள்ளீர்கள். ஞானத்தின் நேரம் என்பது பகல் மற்றும் பக்தியின் நேரம் என்பது இரவு என்பது யாருக்குமே தெரியாது. பகல் மற்றும் இரவு என்றால் பின் அவசியம் பாதி பாதியாக இருக்கும். சாஸ்திரங்களில் கல்பத்தின் ஆயுள் நீண்டதாக எழுதி விட்டுள்ளார்கள். ஞானத்திற்கு வெகு காலம் கொடுத்து விட்டுள்ளார்கள். துவாபர கலியுகத்தின் ஆயுள் குறைவாக காண்பித்துள்ளார்கள். இதில் இரவு மற்றும் பகலினுடைய முழு கணக்கோ வருவதில்லை. கிருஷ்ணபட்சம் மற்றும் சுக்ல பட்சம் என்றும் கூறுகிறார்கள். சாஸ்திரங்களில் இந்த வார்த்தைகள் உள்ளன. "நீங்கள் சாஸ்திரங்களை ஏற்பதில்லை பின் சாஸ்திரங்களின் வார்த்தைகளை ஏன் மேற்கோள் காட்டுகிறீர்கள்" என்று கூறுகிறார்கள். அப்பொழுது நீங்கள் இவ்வாறு புரிய வைக்க வேண்டும், "சாஸ்த்திரங்களின் சாரமோ பாபா தான் கூறுகிறார்". குறிப்பிட்ட இந்த சாஸ்த்திரத்தில் இது சரியாக இல்லை, இது சரியாக உள்ளது. குறிப்புகளோ அவசியம் கொடுக்க வேண்டி உள்ளது. எப்படி இப்பொழுது கண்காட்சியில் அனுமார், கணேசர், வாமன அவதாரம் போன்ற படங்களை காண்பிக்கிறோம்..... புரிய வைப்பதற்காக காண்பிக்கத் தான் வேண்டும் அல்லவா? எந்த விஷயங்கள் தவறானவையோ அவற்றை வர்ணனை செய்து பின் சரி எது, என்பதை புரிய வைக்கிறார்.

இப்பொழுது பாபாவிற்கு சிவாய நமஹ! என்று மகிமை பாடுகிறார்கள். பின் த்வமேவ மாதாஸ்ச பிதா.... என்று எழுதியுள்ளது. பெயரோ கொடுக்க வேண்டி உள்ளது அல்லவா? நமது தந்தை யார் என்பது மனிதர்களுக்கு தெரியாது. "ஓ காட் ஃபாதர்" என்றும் கூறுகிறார்கள். புத்தி அங்கு செல்கிறது. மனிதர்கள் பிரார்த்தனை ஆகியவை செய்கிறார்கள். ஆக பரம பிதா பரமாத்மா பரலோகத்தில் நிவாசம் செய்கிறார் என்பதை அறிந்துள்ளார்கள். பிரம்மா, விஷ்ணு, சங்கரனை நினைவு செய்கிறார்கள் என்றால் புத்தி சூட்சுமவதனத்திற்கு சென்று விடும். முதல் மாடி, இரண்டாவது மாடி, பின் மூன்றாவது மாடி உள்ளது. இப்பொழுது முக்கியமான விஷயமாவது தந்தையை மறந்து விட்டுள்ளார்கள். தந்தை வந்து புகார் கொடுக்கிறார். நீங்கள் எனக்கு எவ்வளவு நிந்தை செய்து விட்டுள்ளீர்கள். அனைவருக்கும் சத்கதி

அளிக்கக் கூடிய தந்தைக்கு அனைவரும் அமர்ந்து நிந்தை செய்துள்ளார்கள். பகவானுடைய வாக்கு என்று உள்ளது அல்லவா, "யதா யதாஹி...." பாரதவாசிகள் தங்களது தர்மத்திற்கு நிந்தை செய்கிறார்கள். இறைவன் சர்வ வியாபி என்கிறார்கள். எல்லோருக்குள்ளும் இறைவன் இருக்கிறாரா என்ன? பின் ஆமை அவதாரம், மீன் அவதாரம், பன்றி அவதாரம் என்று கூறி விடுகிறார்கள். தந்தையோ பாரதவாசி குழந்தைகளுக்குத் தான் கூறுகிறார். ஏனெனில் குழந்தைகள் தான் நிந்தை செய்கிறார்கள். இந்த செல்ல குழந்தை (பிரம்மா) கூட நிந்தை செய்து கொண்டிருந்தார். இந்த நிந்தை கூட நாடகத்தில் பொருந்தி இருந்தது. அப்பொழுது தான் பாவ ஆத்மா ஆகிறார்கள். தந்தையோ அனைவரையும் பாவனமாக ஆக்கி இருந்தார். ஏனெனில் பதீத பாவனர் ஆவார். பாவனமாக ஆக்கி உலகின் அதிபதியாக ஆக்குகிறார். அவ்வாறு ஆக்கக் கூடிய தந்தைக்கு எவ்வளவு அவ சொற்கள் கூறுகிறார்கள். புரிய வைக்கும் நேரத்தில் அப்பொழுது ஏற்றுக் கொண்டு விடுகிறார்கள். உண்மையில் உங்களுடைய விஷயம் சரியானது என்று இத்தனை பேர் கையெழுத்திட்டார்கள் என்று சமாசாரம் கூட வருகிறது. இப்பொழுது ஸ்ரீமத் பகவத் கீதா என்று கூறுகிறார்கள். எனவே பகவானினுடையது சிறந்ததிலும் சிறந்த வழி... உயர்ந்ததிலும் உயர்ந்தவருடைய வழி கூட உயர்ந்ததாக இருக்கும் அல்லவா? அவர் வந்து பதீத பிரஷ்டாச்சாரிகளை சிரேஷ்டாச்சாரியாக ஆக்குகிறார். எனவே முதன் முதலில் ஒருவருடைய அறிமுகம் கொடுக்க வேண்டி உள்ளது. குழந்தைகளாகிய உங்களிடையேயும் வரிசைக்கிரமமாகவோ இருக்கவே இருக்கிறார்கள். பாபா என்ன செய்வது, மாயையின் புயல் எங்களை நிலைத்திருக்கவே விடுவதில்லை என்று நிறைய குழந்தைகள் எழுதுகிறார்கள். எங்களுக்கு இன்னின்ன விகாரங்கள் தொல்லைப்படுத்துகின்றன. நீங்கள் இவற்றின் மீது வெற்றி அடைய வேண்டும் என்று தந்தை கூறுகிறார். இல்லாவிட்டால் பதவி மோசமாகி போய் விடும். ஆசிரியரே இது போல ஏதாவது காரியம் செய்கிறார்கள் என்றால் "இவருடைய நடத்தையே இவ்வாறு இருக்கிறது பின் மற்றவர்களுக்கு எப்படி அறிவுரை அளிக்கிறார்கள் என்று மற்றவர்களுக்கு சந்தேகம் ஏற்படும்". விகாரம் கூட சிலது "ஸெமி" (அரை அளவு)யாக இருக்கும். ஒவ்வொரு விஷயத்திலும் சதோ, ரஜோ, தமோ என்று இருக்கவே இருக்கும். சத்யுகத்திற்கு சதோ உயர்ந்தது என்று கூறப்படுகிறது. கலியுகத்திற்கு தமோ தாழ்ந்தது என்று கூறப்படுகிறது. உலகத்தை ப்ரஷ்டாச்சாரி (மோசமானது) என்று கூறுகிறார்கள். ஆனால் தங்களை யாரும் ப்ரஷ்டாச்சாரி என்று புரிந்து கொள்வது இல்லை. இந்த இராவண ராஜ்யத்தில் ஒருவர் கூட சிரேஷ்டாச்சாரி இல்லை என்று தந்தை புரிய வைக்கிறார். உதாரணமாக ஒருவரிடம் உயர்ந்ததிலும் உயர்ந்தவர் யார் என்று கேட்கப்படுகிறது.பின் பகவான் என்று அவர் பதில் கூறுவார். அவரது தொழில் பற்றி அறிந்திருக்கிறீர்களா? "இல்லை",அல்லது சந்நியாசிகள் தான் உயர்ந்தவர்கள் என்பார்கள். ஏனெனில் பவித்திரமாக இருக்கிறார்கள். சுயம் தாங்களும் சந்நியாசிகளை பின் பற்றுகிறார்கள். நமஸ்தே என்கிறார்கள் என்றால்"சந்நியாசிகளை விடவும் யாராவது உயர்ந்தவர்கள் இருப்பார்கள் அல்லவா" என்று அவர்களிடம் கேட்க வேண்டும். சந்நியாசிகள் கூட பகவானின் சாதனை செய்கிறார்கள். தற்சமயத் தில் படங்கள் கூட நிறைய அமைத்துள்ளார்கள். எல்லோரையும் விட உயர்ந்தவராக பரமாத்மாவைத் தான் வைக்கிறார்கள். இப்பொழுது ராமர் அல்லது கிருஷ்ணருக்கு முன்னால் சிவலிங்கம் வைப்பது. இது கூட பெருமைப்படுத்துவதாகும். இல்லாவிட்டால் அவர்கள் யாராவது சிவனுக்கு பூஜை செய்கிறார்களா என்ன? அவர்களோ சுயம் ஆட்சி புரிகிறார்கள். பின் அவர்கள் பதீதர்களாக ஆகும் பொழுது பூஜை செய்ய முற்படுகிறார்கள். உயர்ந்ததிலும் உயர்ந்தவர் என்று நிராகார் பரமாத்மாவிற்குத் தான் கூறப்படுகிறது - பதீத பாவனர் அனைவருக்கும் சத்கதி தாதா அனைவரின் "லிபரெட்டர்" தன்னுடன் அனைவரையும் அழைத்து செல்வார். அவர் நமது தந்தை ஆவார் என்பதை நீங்கள் அறிந்துள்ளீர்கள். நாம் அனைவரும் இப்பொழுது நோய்வாய்ப்பட்டுள்ளோம். ஞானத்தினால் "எவர் ஹெல்தி மற்றும் எவர் வெல்தி" (என்றும் ஆரோக்கியம் செல்வம் உடையவர்களாக) ஆகி விடுகிறோம். தினமும் ஒரு ஆப்பிள் சாப்பிட்டீர்கள் என்றால் எவர் ஹெல்தி ஆகி விடுவீர்கள் என்றும் கூறுகிறார்கள். இது போல நீங்கள் பிராக்டிகல் பார்த்து கொண்டிருக்கிறீர்கள். மாயை எல்லோரையும் நோயாளியாக ஆக்கி விட்டுள்ளது. இப்பொழுது எல்லோரையும் ஹெல்தி, வெல்தியாக ஆக்குபவர் ஒரே ஒரு தந்தை ஆவார். சூட்சும வதனத்தில் கூட ஆத்மாக்கள் ஹெல்தியாக (ஆரோக்கியமாக) இருக்கிறார்கள். இங்கு ஆரோக்கியமற்ற ஆத்மாக்களாக இருக்கிறார்கள். பின் மூலவதனத்திருந்து முதலில் ஆத்மாக்கள் வரும் பொழுது சுகத்தை தான் பார்ப்பார்கள், எனவே தந்தை பிரம்மா மூலமாக நமக்கு நிறைய சுகம் அளிக்கிறார். இப்பொழுது விநாசமோ ஆகத்தான் போகிறது. இந்த யக்ஞத்திலிருந்து தான் விநாச ஜுவாலை வெளிப்பட்டுள்ளது. அந்த ஜனங்கள் அமைதி எப்படி வரும் என்று ஆலோசனை செய்து கொண்டிருக்கிறார்கள். ஆனால் "மனிதன் ஒன்று நினைக்க தெய்வம் ஒன்று நினைக்கும்" என்று கூட பாடப்படுகிறது. விநாசம் ஆகும் பொழுதே

அமைதியும் ஏற்படும். பின் அனைத்து ஆத்மாக்களும் முக்தி தாமத்திற்கு சென்று விடுவார்கள். விநாசம் ஆவதைத் தவிர வேறு வழி இருக்கவே முடியாது. இதையும் கூட அவர்களுக்கு யார் தான் கூறுவது? இந்த பீஷ்ம பிதாமகர் ஆகியோருக்கோ கடைசியில் தான் ஞானம் கிடைக்கப் போகிறது.

மனிதர்கள் அமைதிக்காக வழி தேடுகிறார்கள், தங்களுக்குள் சேர்ந்து ஒன்றாகி விடலாம் என்று. ஆனால் அப்படி ஆகப்போவதே இல்லை. இதற்கு முன்பும் விநாசம் ஆகி இருந்தது. யாதவர்கள் மற்றும் கௌரவர்கள் கூட இருந்தார்கள். கீதையின் பகவான் கூட வந்திருந்தார். இப்பொழுது பதீத உலகம் ஆகும். இதில் சிரேஷ்டாச்சாரியாக யாருமே இருக்க முடியாது. எல்லோரையும் விட சிரேஷ்டமானவர்கள் லட்சுமி நாராயணர் ஆவார்கள். அவர்கள் தான் சத்யுகத்தில் ஆட்சி புரிந்து கொண்டிருந்தார்கள். இப்பொழுதோ (ப்ரஷ்டாச்சாரம்) தீய செயல்களின் விருத்தி ஆகி விட்டுள்ளது. எனவே அவசியம் விநாசம் ஆகத் தான் போகிறது. விநாசத்திற்கு பிறகு தான் எல்லோரும் சுகம் சாந்தியை அடைய முடியும். நாம் ஆதி சனாதன தேவி தேவதா தர்மத்தினர் ஆவோம் என்பதை எல்லோருக்கும் புரிய வைக்க வேண்டும். முதலில் அதே தர்மம் இருந்தது. இப்பொழுது இல்லை. மீண்டும் அதன் ஸ்தாபனை ஆகிக் கொண்டிருக்கிறது. இச்சமயத்தில் நாம் பிராமணர்கள் ஆவோம், தேவதைகள் அல்ல. யாராவது சொற்பொழிவு நிகழ்த்துவதற்காக மேடைக்கு செல்கிறார்கள் என்றால் இது இது பற்றி பேசுவோம் என்று, ஏதாவது சிந்தனை செய்து, ஆலோசனை செய்து வருவார்கள். என்னுடைய குழந்தைகளோ என்ன பேச வேண்டும் என்பதை அறிந்துள்ளார்கள். அமைதியை நிலை நாட்டுபவரோ ஒரே ஒரு அனைவரின் சத்கதி தாதா தந்தை ஆவார். அவரே லிபரேட்டர் ஆவார். இந்த நேரமே அனைவரையும் திரும்பி அழைத்து செல்வதற்கானது ஆகும்.

குழந்தைகளே நீங்கள் தங்களை சத்யுகம் செல்வதற்கு தகுதி உடையவர்கள் என்று நினைக்கிறீர்களா? என்று பாபா குழந்தைகளை கேட்கிறார். இராவணன் மீது வெற்றி அடைந்துள்ளீர்களா? பாபா வெற்றி அடைவதற்கான புருஷார்த்தம் செய்து கொண்டிருக்கிறோம் என்று கூறுகிறார்கள். கையோ எல்லோரும் உயர்த்துகிறார்கள். ஏனெனில் வெட்கம் ஏற்படுகிறது. பாபா கூறுகிறார், தங்கள் முகத்தையோ பாருங்கள், எவ்வளவு நேரம் தந்தையை நினைவு செய்கிறேன்? கடைசி நேரத்தில் யாருமே நினைவிற்கு வராத அளவிற்கு அப்பேர்ப்பட்ட நிலை வேண்டும். அப்பொழுதுதான் அந்த் மதி சோகதி (கடைசியில் புத்தி எவ்வாறோ அவ்வாறே கதி) ஆகும். கர்மாதீத் நிலைக்கு சமீபத்தில் செல்ல முடிந்தவர்களாக இருப்பீர்கள். மற்றவர்களுக்கு சேவை செய்யும் பொழுது தான் சதா மகிழ்ச்சியாகவும் இருக்க முடியும். நீங்கள் ஆன்மீக சமூக ஊழியர்கள் ஆவீர்கள். உங்களைத் தவிர வேறு யாருமே ஆத்மாவிற்கு இன்ஜெக்ஷன் போட முடியாது. ஞான மையை சத்குரு அளித்தார் என்று கூட பாடப்படுகிறது. எனக்கு முழு சிருஷ்டியின் முதல், இடை, கடை பற்றிய ஞானம் கிடைத்து விட்டுள்ளது என்று இப்பொழுது ஆத்மாவிற்கு தெரிந்து விட்டுள்ளது. இந்த ஆத்மா சரீரம் மூலமாக ஞானக்கடலிடம் கூறினார். இப்பொழுது நாம் திரும்பி செல்ல வேண்டும் என்பது மிகவும் மகிழ்ச்சியான விஷயம் ஆகும். பழைய சட்டையை விட்டு விட்டு புதிய சட்டை எடுக்க வேண்டும். இந்த காரணத்தால் பெயரே ஷ்யாம் சுந்தர் என்றுள்ளது.

நாம் (சுந்தர்) அழகாக இருந்தோம் இப்பொழுது (ஷியாம்) கறுப்பாக ஆகி உள்ளோம். மீண்டும் அழகாக ஆவோம் என்பதை நீங்கள் அறிந்துள்ளீர்கள். பாபா அழகாக ஆக்குகிறார். மாயா இராவணன் கறுப்பாக ஆக்குகிறான். காம சிதையில் அமருவதால் கறுப்பாக ஆகி விடுகிறார்கள். இது மிகவுமே புரிந்து கொள்ள வேண்டிய சகஜமான விஷயங்கள் ஆகும். ஞானமோ மாணவர்களின் புத்தியில் வரிசைக்கிரமமாகத் தான் தாரணை ஆகிறது. ஒரு சிலரோ மிகவுமே மழுங்கிய புத்தி உடையவராக உள்ளார்கள். படிப்பவர்கள் மிகவும் மந்தமாக உள்ளார்கள் என்று ஆசிரியர் கூறுகிறார். தேக அபிமானம் நிறைய உள்ளது. ஆத்ம அபிமானியாக இருந்தார்கள் என்றால் சதா மகிழ்ச்சியாக இருப்பார்கள். ஆத்மா ஆத்மாவை பார்க்க வேண்டும். அதாவது தனது சகோதரனை பார்த்து குஷி அடைந்து கொண்டே இருக்க வேண்டும். பாபா குழந்தைகளை பார்த்து குஷி அடைகிறார். பாபா கூறுகிறார் குழந்தைகளே உங்களை மாயையிடமிருந்து விடுவித்து திரும்ப கூட அழைத்து செல்வதற்காக நான் வந்துள்ளேன். இந்த உடலில் சிவபாபாவின் பிரவேசம் ஆகிறது. அதுவும் அவசியம் புருவமத்தியில் தான் வருவார். அப்படி இன்றி மேலிருந்து கங்கை பாயுமா என்ன? சிவனின் சவாரி எருது மீது காண்பிக்கிறார்கள். எருதுவின் புருவ மத்தியில் சிவனின் படத்தை காண்பித்துள்ளார்கள்.ஆத்மாவோ அவசியம் புருவமத்தியில் தான் இருக்கும். ஆத்மாவின் இடம் எதுவோ அவசியம் அங்கு தான் அமருவார். குருமார்கள் தங்களது சிஷ்யனை அருகில் அமர்த்துகிறார்கள். எனவே அந்த சத்குரு கூட வந்து அருகில் அமருகிறார். குரு பிரம்மா என்று கூறுகிறார்கள். விஷ்ணுவை அல்லது சங்கரனை குரு என்று கூற மாட்டார்கள். அதே

பிரம்மா பின் விஷ்ணுவின் இரண்டு ரூபம் ஆகிறார். சிவனுக்கு குரு என்றே கூற முடியும். ஏனெனில் அனைவருக்கும் சத்கதி செய்கிறார். உயர்ந்ததிலும் உயர்ந்தவர் பிறகும் பகவான் ஆவார். எவ்வளவு நல்ல முறையில் புரிய வைக்கப்படுகிறது. நல்லது.

இனிமையிலும் இனிமையான காணாமல் போய் வெகுகாலம் கழித்து கண்டெடுக்கப்பட்ட குழந்தைகளுக்கு தாய் தந்தை பாப்தாதாவின் அன்பு நினைவுகள் மற்றும் காலை வணக்கம். ஆன்மீகக் குழந்தைகளுக்கு ஆன்மீகத் தந்தையின் நமஸ்காரம்.

தாரணைக்கான முக்கிய சாரம்:

1. **சதா மகிழ்ச்சியுடனிருப்பதற்காக ஆத்ம அபிமானி ஆக வேண்டும். நாம் ஆத்மாக்கள் சகோதர சகோதரர்கள் ஆவோம், இந்த திருஷ்டியை உறுதிப்படுத்த வேண்டும்.**

2. **ஆன்மீக சமூக ஊழியர் ஆகி ஆத்மாவிற்கு ஞானத்தின் இன்ஜெக்ஷன் போட வேண்டும். அனைவருக்கும் ஆன்மீக சேவை செய்ய வேண்டும்.**

வரதானம்: நாடகத்தில் பிரச்சனைகளை விளையாட்டாக கருதி மிகச் சரியான பாகத்தை நடிக்கும் ஹீரோ பார்ட்தாரி ஆகுக!

யாருடைய எந்த செயலும் சாதாரணமாக இல்லையோ, ஒவ்வொரு பாகமும் மிக சரியாக உள்ளதோ அவர் ஹீரோ பாகதாரி என்று அழைக்கப்படுகிறார். எவ்வளவு தான் பிரச்சனைகள் இருந்தாலும் சரி எப்பேர்ப்பட்ட நிலைமைகள் இருந்தாலும் சரி எதற்குமே அடிமையாக ஆகாமல் அதிகாரி ஆகி பிரச்சனைகளை அப்படி கடக்க வேண்டும் அதாவது விளையாட்டை விளையாடிய படியே கடந்து கொண்டிருக்கிறோம் என்று தோன்ற வேண்டும். விளையாட்டில் எப்பொழுதும் குஷி இருக்கும். எப்பேர்ப்பட்ட விளையாட்டாக இருந்தாலும் சரி, வெளியில் அழ வேண்டிய பார்ட் கூட இருக்கலாம். ஆனால் இவை எல்லாமே எல்லையில்லாத விளையாட்டு ஆகும். விளையாட்டு என்று கருதுவதால் பெரிய பிரச்சனை கூட லேசானதாக ஆகி விடும்.

சுலோகன்: யார் சதா மகிழ்ச்சியாக இருக்கிறார்களோ அவர்களே புகழுக்கு பாத்திரமானவர்கள் ஆவார்கள்.